விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 17 இதழ் 264
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 03-11-1991

நாடாளுமன்றத்தை தொடர்ந்து நடாத்துவதில் இழுபறி நிலை

[கொழும்பு]
சபாநாயகர் தனைமை தாங்கும் நாடாளுமன்றக் கூட்டங்களை எதிர்க்கட்சிகள் பகிஷ்கரித்து வருவதனால் நாடாளுமன்றத்தினைத் தொடர்ந்து நடத்துவதில் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

இளம் பெண்ணிடமிருந்து பொருட்கள் கொள்ளை

[கொழும்பு]
இத்தாலியிலிருந்து யாழ்திரும்பிய இளம் பெண் ஒருவரின் பொருள்களில் பல வவுனியா தாண்டிக்குளம்

(4-ம் பக்கம் பார்க்க)

பதவிகள் நியமனத்தில் தமிழர் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)
உள்நாட்டு வரித்திணைக்களத்தின் வரி மதிப்பீட்டாளர் பதவிகள் நியமனத்தில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள்.
வரிமதிப்பீட்டாளர்களை நியமிப்பதற்காக நடைபெற்ற போட்டிப்பரீட்சையில் பல

(4-ம் பக்கம் பார்க்க)

ஜனவரியில் பொதுத்தேர்தல் அரசியல் கட்சிகள் எதிர்பார்ப்பு

[கொழும்பு]
இலங்கையில் அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் பொதுத்தேர்தல் நடைபெறலாம் என்று அனைத்து அரசியல்கட்சிகளும் எதிர்பார்க்கின்றன.

இவ்வருட வரவு செலவுத்திட்டம், தேர்தல் வரவு செலவுத்திட்டமாக காட்சியளிப்பதால் தேர்தல் நடைபெறக் கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் சிறிதளவு குறைக்கப்பட்டுவருவதுடன் அரச ஊழியருக்கு 300 ரூபா விசேட படி வழங்கப்படவிருப்பது போன்ற செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதும் தேர்தல் நடைபெறும்சாத்தியக்கூறுகள் அதிகரித்துள்ளதைக் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 7-ந் திகதி நடைபெறவிருக்கும் சார்க் மாநாட்டின் பின் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் நடைபெறலாம் என்று அனைத்து அரசியல் கட்சிகளும் எதிர்பார்க்கின்றன எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. [மா]

விமானக் குண்டுவீச்சில் வைத்தியசாலை சேதம்

[பண்டத்தரிப்பு]
பூநகரிப் பகுதியில் அண்மையில் நிகழ்ந்த விமானக் குண்டு வீச்சின்போது பூநகரி அரசினர் வைத்தியசாலையும் பெரும் சேதத்துக்குள்ளாகியுள்ளது.

மருந்தகக் கட்டிடம், வார்ட்டுகள் என்பன பலத்த சேதமடைந்துள்ளதாகவும், ஊழியர்களும் வார்ட்டுகளில் தங்கிச் சிகிச்சை பெற்றுவந்த நோயாளர்களும் கட்டிடத்தை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடத்தில் தரித்து நின்றதால் உயிராபத்து தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி வைத்திய அதிகாரி தெரிவித்தார். [72]

சார்க் மகாநாடு கூட்டம்

[கொழும்பு]
சார்க் மகாநாடு வெளியுறவுச் செயலாளர்கள் கலந்து கொண்ட கூட்டம் நேற்று கொழும்பில் பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. (மா)

சர்வகட்சி மாநாட்டு யோசனைகள் நாடாளுமன்ற குழுவிற்கு சமர்ப்பிக்க முடிவு

[கொழும்பு]
இனப்பிரச்னை தொடர்பாக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு அரசியல் கட்சிகள் சர்வகட்சி மாநாட்டில் சமர்ப்பித்த யோசனைகளை அனுப்பி வைப்பதென்று சர்வகட்சி மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

சர்வகட்சி மாநாடு ஜனாதிபதி செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நீதி அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத் தலைமையில் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இனப்பிரச்னை தொடர்

(4-ம் பக்கம் பார்க்க)

1990 க. பொ. த. (சாதாரண) வட, கிழக்கு பகுதியில் விசேட பரீட்சை

[யாழ்ப்பாணம்]
1990-ம் ஆண்டு டிசம்பர் மாதம் க. பொ. த. சாதாரணப் பரீட்சைக்குத் தோற்ற முடியாத வடக்கு-கிழக்கு மாகாண மாணவர்களுக்கு விசேட பரீட்சை ஒன்று நடைபெறவுள்ளது என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை இவ்வருடத்துக்கான க. பொ. த. சாதாரணப் பரீட்சை டிசம்பர்

(4-ம் பக்கம் பார்க்க)

வடபகுதி யுத்த முனைக்கு பெருமளவு கடற்படையினர்

[கொழும்பு]
கடற்படையில் பெருமளவினர் இனிமேல் வடபகுதி யுத்த முனைக்கு செல்லவேண்டுமென புதிய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளான்ஸி பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பதவியேற்றபோதே வைஸ்அட்மிரல்

(4ம் பக்கம் பார்க்க)

'சார்க்'கில் பூட்டான் மன்னர் கலந்து கொள்ள மாட்டார்

[கொழும்பு]
கொழும்பில் இம்மாதம் 7ம் திகதி நடைபெறவுள்ள 6வது சார்க் உச்சி மாநாட்டில் பூட்டான் மன்னர் கலந்துகொள்ளமாட்டாரென்று தெரிவிக்கப்படுகிறது

இத்தகவலை ஜனாதிபதியின் ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

பூட்டான்மன்னர்கொழும்பு

(4ம் பக்கம் பார்க்க)

ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் சென்ற இளைஞர் கைது

[கொழும்பு]
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குச் சென்ற தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

நேற்றுமுன்தினம் இவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளுடன் தொடர்புள்ளவர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர் கைதுசெய்யப்பட்டார்.

இன விகிதாசாரப்படி ஆசிரியர் நியமனம்

(கொழும்பு)
இனவிகிதாசாரப்படி மாவட்ட ரீதியில் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு மாவட்டத்திலுள்ள வெற்றிடங்களுக்கேற்ப இன விகிதாசாரமுறையில் 3 இனத்தவர்களும் போட்டிப்பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படுவார்

(4-ம் பக்கம் பார்க்க)

இன்று இசையருவி வெளியீட்டு விழா

[யாழ்ப்பாணம்]
விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் உருவாக்கி வழங்கும் நாதஸ்வர கானவாரிதி வி. கே. பஞ்சமூர்த்தியின் நாதஸ்வர இசை ஒலிப்பதிவு நாடாவான 'இசையருவி' வெளியீட்டு விழா இன்றுமாலை யாழ். இந்து மகளிர்கல்லூரியில் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை

(4ம் பக்கம் பார்க்க)

ஸாம்பிய அதிபர் தோல்வி

[லுசாக்கா]
ஸாம்பியா ஜனாதிபதி கெனத் கவுண்டா நடந்து முடிந்த தேர்தலில் தோல்வியடைந்துள்ளார்.

திரு. கெனத் கவுண்டா பிரிட்டனிடமிருந்து சாம்பியா சுதந்திரம் பெற்ற காலம் தொட்டு 27 வருட காலமும்

(4-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

புத்தகம்

நாமம் சொல்லுவோம் நமனை வெல்லுவோம் எங்கும் கிடைக்கும் (சி-5546)

விற்பனைக்கு

நல்ல இன அல்சேசன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு (கறுப்பு). பூச்சி அகற்றப்பட்டவை. வரதன் சைக்கிள் கடை, அரசடி, நவாலி. (சி-5556)

இடமாற்றம்

தீவகத்தில் ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவில் சேவையாற்றிய பாக்கியம் குழந்தைகள் வைத்தியசாலை தற்காலிகமாக கல்வியங்காட்டில் இருந்து 1 மைல் தொலைவில் உள்ள இருபாலைச் சந்தி, குமரபுரம் இல்லத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. நிர்வாகம். (சி-5551)

கல்வி

G. C. E (O/L)ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் 25 வருட அநுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலயத்திற்குள் விஷேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுக நாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி. (சி-5554)

பல்கலைக்கழக

மாணவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 1990/91-ம் ஆண்டுக்கு நாளை 4-ம் திகதி கலைப் பீடமாணவர்களும், அடுத்தமாதம் 2-ம் திகதி விஞ்ஞான பீட மாணவர்களும், 1992-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் திகதி விவசாய பீட மாணவர்களும் அனுமதிக்கப்படுவார்கள். (152)

பதில்

கிராம சேவை அலுவலர் வேதனம்

(சித்தன்கேணி)

யாழ். மாவட்டத்தில் பதில் கடமையாற்றிய கிராமசேவை அலுவலர்களுக்கு அதற்குரிய வேதனம் வழங்கப்படுகின்றன.

யாழ் மாவட்டத்தில் பல கிராமசேவை அலுவலர் பிரிவுகள் வெற்றிடமாகவுள்ளன.

இந்த இடங்களுக் தமது பிரிவு கடமைகளுடன் மேலதிக கடமையாற்றிய கிராமசேவை அலுவலர்களுக்கு அதற்கான வேதனம் வடக்கு கிழக்கு மாகாண உள்துறை அமைச்சின் அனுமதியுடன் தற்போது வழங்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் சில கிராமசேவை அலுவலர்கள் இரண்டு வருடங்களாக பதில் கடமை புரிந்து இதற்கான வேதனத்தை பெறுவது இங்கு குறிப்பிடத்தக்கது. (127)

வயிற்றோட்ட

நோய்க்கு 2000 பேர் பலி

(டாக்கா)

பங்களாதேஷில் வயிற்றோட்ட நோய்க்கு இதுவரையில் 2,000 பேர் பலியாகியுள்ளதாகவும் 1 லட்சத்திற்கும் அதிகமானோர் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வகுப்பேற்ற பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாசாலையில் 1991ம் ஆண்டுக்கான வகுப்பேற்றப் பரீட்சைகள் எதிர்வரும் 13ம் திகதி மேற்படி பாடசாலையில் ஆரம்பமாகுமென அதிபர் திரு. சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

செப். மாத ஓய்வூதியம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு செப்டம்பர் மாததிற்கான ஓய்வூதியப்பணம் இவ்வாரம் பணமாக வழங்கப்பட்டது. (72)

பென்சன்

வவுச்சர் வரவில்லை

(யாழ்ப்பாணம்)

ஒக்டோபர் மாதத்துக்குரிய 'பென்ஷன் வவுச்சர்' இம்முறை வந்துள்ள 'குமண' கப்பலில் வரவில்லையென யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

மேற்படி மாதத்துக்குரிய பென்ஷன் வவுச்சர்களை உடன் அனுப்பி வைக்கும்படி அவசர வேண்டுகோள் ஒன்றை தான் கொழும்புக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இக்கப்பலில் தபால் பொதிகள் ஏதும் வரவில்லையென்றும் கூறப்படுகின்றது. (வி)

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க

உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம் 'இ', 'உ' அட்டைக்கான நவம்பர் 91ற்கான உலர் உணவு விநியோகம் கீழே தரப்பட்டுள்ள இடங்களில் பின்வரும் திகதிகளில் விநியோகம் செய்யப்படவிருப்பதாக அறிவித்துள்ளது.

ஜெசீமா பிக்சர் பலஸ், கே கே எஸ் வீதி—கிளைகள் 1, 2, 3, 5, 13; ஜும்மா மொஸ்கியூ லேன்—கிளைகள் 4, 6, 9 ஜும்மா மொஸ்கியூ லேன்—கிளைகள் 7, 8, 10, 11; பண்ணை வீதியிலுள்ள கி. எஸ். கே. கட்டிடம்—'உ' அட்டை விநியோகம்

1, 4, 7ம் கிளைகள் 4ம், 8ம் தேதி, 2, 6, 8ம் கிளைகள் 5ம் 9ம் திகதி, 3, 9, 10ம் கிளைகள் 6ம், 10ம் திகதி 5, 6, 11, 13ம் கிளைகள் 7ம் 11ம் திகதி

இம்மாதம் 15ம் திகதிவரை 'இ', 'உ' அட்டைகளுக்கு உணவுப்பொருள் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்ட திகதிக்குப்பின் பொருட்கள் வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மருந்துக்கு தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளிலும், கிராமிய மத்திய மருந்தகங்களிலும் தனியான ஆஸ்பத்திரிகளிலும் பலமுக்கிய மருந்துகள் இல்லாமையால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சில மாவட்டங்களில் அவசர நோயாளிகளை எடுத்துச் செல்வதற்கு ஒரு அம்புலன்ஸ் வண்டிகூட இல்லாதிருப்பதனால் அவசர சிகிச்சைக்காக நோயாளிகளை எடுத்துச் செல்வதில் மக்கள் பெரும் சிரமத்தை எதிர் நோக்கியுள்ளனர்.

இதனால் வீண் உயிரிழப்புக்கள் அடிக்கடி பல பகுதிகளிலும் ஏற்படுகின்றன.

சில அரசினர் மத்திய மருந்தகங்களில் கட்டுத்துணி, பிளாஸ்ரர், பஞ்சு, லிந்த, கொட்டன் போன்ற பொருட்களுக்கும் பெருந்தட்டுப்பாடு நிலவுகிறது. (154)

வடக்கு - கிழக்கில்

விளையாட்டு அதிகாரிகள் பதவிகள் வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 50க்கும் மேற்பட்ட விளையாட்டு உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள், கடந்த இரண்டு வருடங்களாக நிரப்பப்படாமல் இருக்கின்றன.

மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு மாவட்டங்களில் விளையாட்டு உத்தியோகத்தர்கள் எவரும் தற்போது கடமையாற்றவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 10 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும், திருமலை மாவட்டத்தில் 11 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் விளையாட்டு உத்தியோகத்தர் எவருமே தற்போது நியமிக்கப்படவில்லை.

அம்பாறை மாவட்டத்தில் 16 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு 7 பேர் மட்டுமே கடமையாற்றுகின்றனர். இந்த 7 பேரும் சிங்கள உத்தியோகத்தர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 4 உதவி அரச அதிபர் பிரிவுகளில் ஒருவரும், வவுனியாவில் 4 உதவி அரச அதிபர் பிரிவுகளில் இருவரும், மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 உதவி அரச அதிபர் பிரிவுகளில் மூவரும், யாழ். மாவட்டத்தில் உள்ள உதவி அரச அதிபர் பிரிவுகளில் நால்வர் மட்டுமே தற்போது கடமையாற்றுகின்றனர். (வி)

தொழிற் பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இலகுவாக தொழில்வாய்ப்புப் பெறக்கூடிய முறையில் குறைந்த காலத்தில் பயிற்சிகள்பெற

ஓர் அரிய சந்தர்ப்பம்!

- றேடியோ, T. V., வீடியோ டெக் றிப்பியறிங் சகல இன றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் தொழிற்பாடு, திருத்துதல் ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும். காலம்: 5 மாதம்
- றீவைண்டிங் மின் மோட்டர், மின்விசிறி, ரான்ஸ்போமர் மற்றும் மின்சார பொருட்கள் றீவைண்டிங் செய்தல் ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும். காலம்: 4 மாதம்
- எலக்ரிக்கல் வயறிங் வீட்டு மின்சார வேலைகள், மின்சாரப் பொருட்கள் திருத்துதல் ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும். காலம்: 2 மாதம்
- ENGINEERING DRAWING பொறியியல் பீட 1ஆம் வருட மாணவர்களுக்காக விஷேடமாக பயிற்சியளிக்கப்படுகின்றன. காலம்: 3 மாதம்
- AIR CONDITION AND REFRIGERATION ENGINEERING சகல இன குளிர்சாதனங்களும் எந்நாட்டிலும் திருத்தக்கூடிய முறையில் பயிற்சியளிக்கப்படும். காலம்: 4 மாதம்

O/L படித்த இருபாலாரும் சேரலாம்.

முக்கிய குறிப்பு: குறிப்பிட்ட தொகை விண்ணப்பங்களே ஏற்றுக்கொள்ளப்படும். ஆகையால் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

பயிற்சிகள் மீண்டும் ஆரம்பம்:

07-11-91 (கிழமை நாட்கள்) 9.30 A. M.
09-11-91 (சனி, ஞாயிறு) 9.30 A. M.

JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(நெயில்வே கடவை அருகாமை)
(எ-1685)

இராசி பலன்

03-11-1991
ஞாயிற்றுக்கிழமை
(தமிழுக்கு ஐப்பசி 17)

துவாதசி மாலை 6.46 வரை உத்தரம் மாலை 5.39 வரை இராகுகாலம் மாலை 4.34 முதல் 6.04 வரை சுபநேரம் காலை 9.04 முதல் 10.34 வரை அமிர்தயோகம்.

மேடம்:- மேலோர் நட்பு, உயர்ந்தஸ்தானம், புகழ்.

இடபம்:- கருத்துமோதல் அசதி கடும்யோசனை

மிதுனம்:- பின்வாங்குதல், தொழில் பிணக்கு, குடும்ப பிரிவு.

கடகம்:- தொழில் சிறப்பு, பணவரவு, காரியசித்தி

சிங்கம்:- குடும்ப கஷ்டம், மனைவிக்கு பீடை, கலக்கம்.

கன்னி:- மன அமைதி, தொழில் உறவு, வெற்றி.

துலாம்:- முயற்சியில் தோல்வி, கடும்பகை, அலைச்சல்.

விருச்சிகம்:- குடும்ப சுகம், புத்திரர் பெருமை புகழ்.

தனுசு:- காரிய அனுகூலம், குடும்ப சிறப்பு, தானதர்மம்.

மகரம்:- நண்பர் பகை, அதிகாரிகள் சிரமம், மனக்குறை.

கும்பம்:- குடும்பதகராறு, அவமானம், கடன்சுமை.

மீனம்:- சுபகாரியம், அதிகாரசிறப்பு, தொழில் லாபம்.

ஜோஸ்யர்

90 ம் நாள் நினைவஞ்சலி

வீர ஜனனம்
02-04-1966

வீர மரணம்
05-08-1991

புல்லாவெளியில் நேரடி மோதலில் வீரமரணமடைந்த

லெப்டினன்ட் நிதி

(நடராசா ஜெயராசா)

தமிழீழ விடிவிற்காய் புறப்பட்ட வீரனே
தமிழினத்தின் வீழ்ச்சி கண்டு கலங்கிய நிதியே
நீ மடியவில்லையடா உன் கதை முடியவில்லையாடா
உன் ஆத்ம சாந்திக்காகப் பிராத்திக்கும்
குடும்பத்தினர்.

வட்டுவத்தை, அல்வாய் கிழக்கு. (சி-5560)

★ தீவுப் பகுதிகளில் வீடுடைத்து
பெறுமதியான பொருள்கள் படையினரால் கொள்ளை

(கொழும்புத்துறை)

தீவுப்பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் மக்கள் இடம்பெயர்ந்ததை அடுத்து, இங்கு நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் வீடுகளை உடைத்து, வீடுகளில் உள்ள பெறுமதியான பொருள்களை மூட்டை முடிச்சுக்கட்டி, தங்கள் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைப்பதாக வேலணையில் இருந்து கடலால் நீந்தித் தப்பிவந்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

இங்குள்ள குடிசைகளில் பெரும்பாலானவை எரிக்கப்பட்டுள்ளதாகவும், மக்கள் இராணுவத்தால் துன்புறுத்தப்படுவதாகவும், நாய், பூனைகள் பசிக் கொடுமையால் அலைந்து திரிவதாகவும் தப்பி வந்தவர் தெரிவித்தார்.

தீவுப்பகுதியில் உள்ள சகல படையினரும் இவ்வாறான கொள்ளைகளில் ஈடுபட்டுள்ளனராம். (154)

இந்தியாவுக்கு ஆயுத உதவி ரஷ்யா தொடர்ந்து வழங்கும்

(மாஸ்கோ)

இந்தியாவுக்கான ஆயுத விநியோகத்தை தொடர்ந்தும் மேற்கொள்ளப் போவதாக ரஷ்யக் குடியரசின் அதிபர் திரு. பொறிஸ் ஜெல்சின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்தியாவுக்கான ஆயுத விநியோகத்தை நிறைவேற்றிவைக்க வேண்டிய வாக்குறுதி அனைத்தையும் ரஷ்யக் குடியரசு நிறைவு செய்யும்.

இந்தியா உட்பட பிறநாடுகளுக்கான பாதுகாப்பு உபகரண விநியோகத்தை தமது குடியரசு தொடர்ந்து வழங்கி வருமென்றும் திரு. ஜெல்சின் தெரிவித்துள்ளார். (சி)

300 குடும்பங்களுக்கு 'சன்லைட்' விநியோகம்

(சித்தன்கேணி)

காரைநகர் தோப்புக்காட்டைச் சேர்ந்த 300 குடும்பங்களுக்குச் சன்லைட் சவர்க்காரம் விநியோகிக்கப்பட்டது.

போரூட் நிறுவனத்தின் உதவியுடன் தோப்புக்காடு நல்லொழுக்க வாலிபர் சங்கத்தினரால், தோப்புக்காட்டில் இருந்து இடம்பெயர்ந்து வந்து வட்டுக்கோட்டையில் இருக்கும் சுமார் 300 குடும்பங்களுக்கே சவர்க்காரம் வழங்கப்பட்டது.

ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் தலா ஒரு சன்லைட் சவர்க்காரம் ரூபா 15-க்கு விநியோகிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (137)

மடு முகாமுக்கு உணவுபொருள்கள்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தால் பராமரிக்கப்படும் மடுக்கோயில் அகதிகள் முகாமுக்கு 200 மெற்றிக் தொன் உலர் உணவுப் பொருட்கள் நேற்று அனுராதபுரத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டது.

20 லொறிகளில் வவுனியா மன்னார் பாதையினூடாக ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலய பிரதிநிதிகளின் மேற்பார்வையில் மடுக்கோயிலுக்கு எடுத்து வரப்பட்டது. மடுக்கோயில் அகதிகள் முகாமில் 26 ஆயிரம் இடம்பெயர்ந்த அகதிகள் இருப்பது குறிப்பிடத்தக்கது. (153)

புதிய அமைச்சர்

(சென்னை)

தமிழக உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சராக திரு. இ. விசுவநாதன் பொறுப்பேற்றுள்ளார்.

கொழும்பு செல்லும் நோயாளருக்கு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு சென்று சிகிச்சை பெற சிபார்சு செய்யப்பட்ட நோயாளர்களையும் அவர்களை அழைத்து செல்பவர்களையும் இம்மாதம் 6ம் திகதி புதன்கிழமை காலை 8 மணிதொடக்கம் பிற்பகல் 3 மணிவரை யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் காரியாலயத்தில் பதிவுசெய்துகொள்ளும்படி பணிப்பாளர் செல்வி நமலர் கனகரட்ணம் அறிவித்துள்ளார்.

கொழும்புசெல்லும் நோயாளர்களையும் அவர்களது உதவியாளர்களையும் சகல ஆவணங்களையும் கொண்டுவரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (56)

விவசாய டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள்
கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

குண்டசாலை விவசாயக் கல்லூரியில் 1992/94-ஆம் கல்வி ஆண்டில் விவசாய டிப்ளோமா கற்கை நெறிக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக விவசாயத் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

போட்டிப் பரீட்சை மூலம் மாணவர்கள் இதற்குத்தெரிவு செய்யப்படவுள்ளனர்.

கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் தமிழ், விஞ்ஞானம், கணிதம், விவசாயம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்றும்' எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை அனுப்பவேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. (56)

கிராமசேவகர் பிரிவுகள் தோறும் பாவனையாளர் பாதுகாப்புக் குழு

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில், பிரதேச மாவட்டத்திலான பாவனையாளர் பாதுகாப்புக் குழுவும், கிராமசேவை அலுவலர் மட்டத்திலான பாவனையாளர் பாதுகாப்புக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 25 கிராமசேவை அலுவலர் பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் ஐவர் கொண்ட பாவனையாளர் பாதுகாப்புக் குழுவும், உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் 9 பேர் கொண்ட பாவனையாளர் பாதுகாப்புக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் வழங்கியுள்ளார். (137)

தராசு படிகளுக்கு முத்திரை இடல்

(கொழும்புத்துறை)

சகல வியாபாரிகளும், தமது தராசு படிகள் அனைத்தையும் நேரில் கொண்டுவந்து முத்திரை இடவேண்டும். தவறுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு யாழ். மாவட்ட நிறுவை அளவுப் பகுதிச் செயலகப் பொறுப்பதிகாரி திரு. கா. நாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

நிறுவை, அளவு உபகரணங்களுக்கு முத்திரையிடும் வேலைகளை, யாழ். உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்தைச் சேர்ந்த நிறுவை அளவுப் பிரிவு மீண்டும் ஆரம்பித்துள்ளது.

புதன்கிழமைகளில் யாழ். செயலகத்தில் காலை 8-30 முதல் பிற்பகல் 2-00 மணிவரை நிறுவைகள், அளவைகள், மேடைத் தராசு, தூக்குத் தராசு போன்றவற்றுக்கு முத்திரையிட்டுக்கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார். (154)

பொதுமக்கள் உதவிப்பணம்:
பழைய நடைமுறையில் அமுல் செய்ய வேண்டும்

(யாழ்ப்பாணம்)

பாதணி உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் இன்னல்களைத் தீர்த்து வைக்க, மூலப் பொருள்களைக் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்குத் தருவிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

வதிரி அபிவிருத்தி நிலையத்தின் ஐவர் கொண்ட தூதுக்குழு ஒன்று, யாழ். அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகருக்குச் சமர்ப்பித்துள்ள மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: ஓய்வூதியக்காரர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கும் தீர்வு காண வேண்டும்.

பல வருடங்களாகப் பழுது பார்க்கப்படாமல் இருக்கும் பூவற்கரை வீதிக்குப் போதிய நிதி ஒதுக்கவேண்டும்.

அரசாங்கப் பொதுமக்கள் உதவிப் பணம் பெறுநர்களைச் சில வருடங்களுக்கு முன் நாலவர் கொண்ட ஒரு குழுவே தெரிவு செய்தது. இந்த நடைமுறையை மீண்டும் பின்பற்றினால் வறிய மக்களுக்குப் பெரும் நன்மை விளையக்கூடும்.

அத்தியாவசிய பொருள்களுக்கான
அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன

(சித்தன்கேணி)

அத்தியாவசிய பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட தேநீர்க்கடைகளுக்கும் ஆலயங்களில் நடைபெறும் விசேட நிகழ்ச்சிகளுக்கும், திருமணம் பூப்புனித நீராட்டுவிழா போன்ற வைபவங்களுக்கும், மரணவீட்டு நிகழ்ச்சிகளுக்கும் அரிசி, மா, சீனி போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களை சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் பெற்றுக் கொள்வதற்கான அனுமதிப்பத்திரங்களை உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் வழங்கி வருகின்றார்.

ஒரே கடையில் 4வது தடவையாக திருட்டு

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோவிலடியிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் நான்காவது தடவையாக பெறுமதிமிக்க பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

ஆனைக்கோட்டையை சேர்ந்த வர்த்தகர் வழமைபோல் தமது வியாபாரத்தை முடித்துக் கொண்டு கடையை பூட்டிச் சென்று மறுநாள் காலையில் வந்து பார்த்தபோது கடையின் முன் பக்கக் கதவுகள் உடைக்கப்பட்டு பெறுமதிமிக்க பொருட்களான மண்ணெண்ணை, பெற்றோல், டீசல், தேங்காயெண்ணை என்பன திருடப்பட்டது தெரியவத்துள்ளது. (71)

புலிகளை ஒடுக்க
புதிய இராணுவ அமைப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை ஒடுக்கும் முகமாக சிறப்பு இராணுவ அமைப்பு ஒன்றை மீண்டும் அரசு ஏற்படுத்தவுள்ளது.

இந்த அமைப்பு இராணுவம் கடற்படை, விமானப்படை, பொலிஸ்படை ஆகியவற்றை ஒன்று சேர்த்த ஒரு கூட்டமைப்பாக செயற்படும் என்றும் இவ்வமைப்பின் தலைவராக இராணுவத் தளமதி லெப். ஜெனரல் ஹமில்டன் வணசிங்க செயற்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வமைப்பு ஏற்கனவே செயற்பட்டு வந்ததென்றும் 6 மாதங்களுக்கு முன் ஜனாதிபதி பிரேமதாசா இந்த அமைப்பைக் கலைக்குமாறு உத்தரவிட்டதாகவும் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

கந்த ஷஷ்டி திருவிழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை அருள்மிகு செந்தில் கதிர்வேலாயுதசுவாமி கோயில் கந்தர் ஷஷ்டித் திருவிழா 7-ம் திகதி தொடக்கம் 13-ம் திகதி வரை நடைபெறும்.

தினசரி காலை ஸ்நபன அபிஷேகம் மாலை ஆறுமுக அர்ச்சனையும் வசந்தமண்டப பூஜையும் சுவாமி வீதிவலம் வருதலும் நடைபெறும். 13-ம் திகதி மாலை திருக்கல்யாணமும் சுவாமி வெளிவீதியுலா வருதலும் இடம் பெறும்.

திருட்டுப் பேர்வழி
புலிகளிடம் ஒப்படைப்பு

(காங்கேசன்துறை)

வீதியில் நிறுத்தப்பட்டிருந்த லொறியிலிருந்து உதிரிப்பாகங்களை திருட முயன்ற நபர் ஒருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இணுவில் பிரதான வீதியில் நிறுத்தப்பட்டிருந்த மேற்படி லொறியினுள் புகுந்து மறைந்திருந்த நபர் ஒருவர் நடுநிசியில் லொறியிலிருந்து உதிரிப்பாகங்களை கலற்றி திருடிச் செல்ல முயன்றசமயம் சந்தேகேட்டு எழுந்த பொதுமக்களால் பிடிக்கப்பட்டார்.

இத்திருட்டுப் பேர்வழி விசாரணைக்காக விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (86)

10,000 பிச்சைக்காரர்கள் கொழும்பில் இடமாற்றம்

(கொழும்பு)

கொழும்பில் நடைபெறவிருக்கும் சார்க் மகாநாட்டைத் தொடர்ந்து கொழும்பிலுள்ள 10 ஆயிரம் பிச்சைக்காரர்கள் தென்மாகாணத்திற்கு அப்புறப்படுத்தப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சமூகசேவைப் பகுதியும் பொலிசாரும் கூட்டாக இணைந்து இந்தப் பிச்சைக்காரர்களை தென்மாகாணத்திலுள்ள கிராமங்களுக்கு லொறிகளில் கொண்டு சென்றதாகக் கூறப்படுகிறது.

சார்க் மகாநாடு நடைபெறும் வேளையில் கொழும்பு மாநகரில் பிச்சைக்காரர்கள் இருந்தால் நகரை அசுத்தப்படுத்துவார்கள் என்றும் இதன்காரணமாக இவர்கள் அப்புறப்படுத்தப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது (மா)

பீரங்கித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மாதகல் கடலில் தரித்து நிற்கும் கடற்படை படகிலிருந்து பொதுமக்கள் வாழும் குடியிருப்புக்களை நோக்கி பீரங்கித் தாக்குதல் நடாத்தப்பட்டது.

நேற்று நடைபெற்ற இத்தாக்குதலினால் பல வீடுகள் சேதமடைந்தன.

கடற்படை தாக்குதல் மீனவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை முனைப்பகுதியில் மீனவர்கள்மீது கடற்படையினர் நடத்திய தாக்குதலினால் ஒருவர் பலியானார்.

கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறை முனைப்பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள்மீது தாக்குதல் நடத்தியதில் தமியாம்பிள்ளை ஆசீர்வாதம் (38வயது) என்பவர் பலியானார். இவருடன் மீன் பிடிக்கச் சென்ற ம. அம்புறோஸ் அன்ரன் என்பவர்படுகாயமடைந்துள்ளார்.

கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பலிகாமம் பிரிவிலுள்ள யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய், சங்கானை, காங்கேசன்துறை ஆகிய இடங்களில் அமைந்துள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கிகளைச் சேர்ந்த அதிகாரிகள் ஊழியர்கள் அனைவருக்குமான கலந்துரையாடல் நிகழ்வொன்று நாளை திங்கட்கிழமை மாலை 3-00 மணிக்கு இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது இக்கலந்துரையாடல் நிகழ்வில் வங்கியாளர் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவினர் கேட்டுக்கொள்கின்றனர்.

நாடாளுமன்ற

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகரை பதவியிலிருந்து விலகுமாறு எதிர்க்கட்சிகள் வற்புறுத்தி வருகின்றமையால் சபாநாயகர் தனது பதவியை ராஜினாமாச் செய்யத் தயாராக இருந்தபோதிலும் அரசு இதற்கு அனுமதி அளிக்கவில்லை.

சபாநாயகர் இராஜினாமச்ச் செய்யும் பட்சத்தில் புதிய சபாநாயகர் தெரிவு இரகசிய வாக்கெடுப்பின் மூலமே தெரிவு செய்யவேண்டிய நிலையிலுள்ளது.

இத்தெரிவில் அதிருப்தியாளர் குழுவைச் சார்ந்தவர் சபாநாயகராக வருவதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது

தொடர்ந்து சபாநாயகர் பதவியை வகிக்கமுடியாத இக்கட்டான நிலையில் எம்.எச். முகம்மது நாடாளுமன்றக் கூட்டங்களை நடத்த முடியாத நிலையிலுள்ளார். (மா)

இன்று இசை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் நடைபெறவுள்ளது. திரு. தேவர் இவ்விழாவில் வரவேற்புரை நிகழ்த்த விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் முதல் நாடாவை வெளியிட்டு வைக்கின்றார்.

விடுதலைப்புலிகளின் யாழ்ப்பிராந்திய சிறப்புத் தளபதி திரு. தமிழ்ச்செல்வன் ஒலிப்பதிவில் பங்கேற்ற கலைஞர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்த பின்னர், மக்கள் முன்னணிச் செயலதிபர் திரு. யோகரத்தினம் யோகி, மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா, மற்றும் வண. பிதா பிரான்ஸிஸ் ஜோசேப் அடிகளார், ந. வீரமணிஜயர், நாதஸ்வர கலாநிதி எஸ். கே. பத்மநாதன், பொன்சுந்தரலிங்கம், நவாலியூர் க. சச்சிதானந்தன், கம்பன் கழகம் இ. ஜெயராஜ் ஆகியோர் சிறப்புரை ஆற்றவுள்ளனர்.

இந்த இசையருவி ஒலிப்பதிவு நாடாவில் பத்து தாயக விடுதலைப் பாடல்களை திரு. வி. கே. பஞ்சமூர்த்தி அவர்கள் நாதஸ்வர இசையாக்கி அளித்துள்ளார். நாதஸ்வர இசையுடன் தவில், மிருதங்கம், தபேலா, வயலின் உட்பட மேற்கத்தைய இசைக் கருவிகளையும் இணைத்து உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடக்கூடிய சிறப்பம்சமாகும்.

வவுனியாவில் பணியாற்றும் அரச ஊழியரைகடமைக்கு வருமாறு உத்தரவு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள சகல அரசாங்க திணைக்களங்களில் வேலைசெய்யும் சகல ஊழியர்களும் இம்மாதம் 18ம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பு வேலைக்கு சமூகம் கொடுக்கவேண்டுமென கேட்கப்பட்டுள்ளார்கள்.

மேற்படி ஊழியர்களுக்கான சம்பளம் இனிமேல் வவுனியா உள்ளூர் திணைக்களத் தலைவர்களூடாகவே வழங்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வி)

நான்கு இளைஞர்கள் ராணுவத்தால் கைது

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாவடிச்சேனை என்னுமிடத்தில் நேற்று நான்கு இளைஞர்கள் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டனர்.

இதேவேளை இம்மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தொடர்ந்து தமிழ் மக்கள் படையினரால் துன்புறுத்தப்பட்டுவருகிறார்கள்

கடந்த 30ம் திகதி மணல்சேனை என்ற இடத்தில் க. ஜெயசங்கர் (19 வயது) என்பவரும் 31ம் திகதி வெளுகலில் வைத்து க. திவாகரன் என்பவரும் கைது செய்யப்பட்டனர்.

கல்விப்பணிப்பாளர் கொழும்பு செல்வார்

(யாழ்ப்பாணம்)

டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் க. பொ. த. (சாதாரண) பரீட்சையை நடாத்துவது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளரை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக யாழ் கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் இம்மாதம் 6-ம் திகதி கொழும்பு செல்லவுள்ளார்.

பருத்தித்துறையிலிருந்து புறப்படும் குமண கப்பலிலே அவர் கொழும்பு செல்லவிருக்கிறார். (153)

உற்பத்திக் குழுக்கள் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராமிய உற்பத்திக் குழுக்களின் தலைவர்கள், செயலாளர்கள் கலந்து கொள்ளும் மாதாந்தக் கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை மாலை 2 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

கூட்டத்தில் கலந்துகொள்ள சீக்கிய தீவிரவாதிக்கு அனுமதி மறுப்பு

(புதுடில்லி)

அயோத்திராமன் கோவில் பாபர் மசூதி பிரச்னை குறித்து கலந்து பேச இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் அழைப்பு விடுத்திருந்த கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற பிரபல சீக்கிய அரசியல்வாதி சிங் ரஞ்சித்சிங்கோன் இந்த கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

தம்மிடமுள்ள சீக்கிய மத சம்பந்தமான பெரிய வாளைக்களைந்துவிட்டு கட்டிடத்தினுள்ளே செல்ல பாதுகாப்பு அதிகாரிகள் கூறியதை தான் ஏற்க மறுத்ததையடுத்துதான் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படவில்லையென்று ரஞ்சித்சிங்கோன் தெரிவித்தார். (மா)

இன விகிதாசார

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள்.

இதற்கான துரித ஏற்பாடுகளை கல்விச்சேவைகள் ஆணைக்குழு மேற்கொண்டுவருகிறது. (சி)

வடபகுதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிளாஸ்ஸி பெர்ணாண்டோ இதனைத்தெரிவித்தார்.

மேலும் அண்மைக்காலங்களில் வடக்கில் இடம்பெற்ற யுத்தங்களில் கடற்படையினர் மேற்கொண்ட பல நடவடிக்கைகள் குறித்து அவர் பாராட்டு தெரிவித்தார். (சி)

சார்க்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உச்சிமாநாட்டுக்கு தான் கலந்துகொள்ளமுடியாததையிட்டு இலங்கை அரசுக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தது.

பூட்டானின் தென்பகுதியில் நடைபெறும் அமைதின்மை காரணமாக பூட்டான்மன்னர் கொழும்புக்கு வர இயலாத கட்டத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சர்வகட்சி மாநாடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாகத் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றித் தமிழ்க் கட்சிகள் இம்மாநாட்டில் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. (மா)

ஸாம்பியா ஜனாதிபதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசுத் தலைவராக இருந்து வந்தவராவர்.

பல கட்சித்தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. பெட்றிக் சிலூபா புதிய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இளம் பெண்ணிட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ தடுப்பு முகாமில் சோதனையிடப்பட்டபோது சோதனையை மேற்கொண்ட பெண் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ளது

பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்தவரான இந்த இளம் பெண் கடந்தவாரம் இத்தாலி நாட்டிலிருந்துகொழும்பு வந்து அங்கிருந்து பண்டத்தரிப்பு வந்துசேர்ந்துள்ளார். இவரிடம் இத்தாலி நாட்டிலுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் சிலர், தீபாவளி பண்டிகைக்கென்று தமது வீட்டாரிடம் ஒப்படைக்கும்படி கொடுத்துவிட்ட புடவைகள், துணிகள், ரெடிமேட் உடுப்புகள் அடங்கிய பார்சல்களையும் தாண்டிக்குளம் இராணுவ தடைமுகாமில் இடம்பெற்ற சோதனையின் போது மேற்படி பெண் இராணுவத்தினர் அபகரித்துவிட்டதாக அறியப்படுகின்றது. (72)

1990 க. பொ. த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல மாவட்டங்களிலும் நடைபெறும் என்றும் பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார் (வி)

பதவிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் விண்ணப்பதாரிகள் சித்தியடைந்தும் ஒரு தமிழருக்கு மட்டும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசு பின்பற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு முரணாக இந்தபதவி நியமனங்களில் கூடுதலாக சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (158)

பாவனையாளர் பாதுகாப்புக் குழுவுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர்களையும், பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்களையும் இன்று பகல் யாழ். செயலகத்தில் சந்திக்குமாறு யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கேட்டுள்ளார்.

இன்று பகல் 11 மணிக்கு யாழ். செயலகத்தில் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை, வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த உதவி அரசாங்க அதிபர்களையும், பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்களையும் அரச அதிபர் சந்திக்கும்படி கேட்டுள்ளார்.

இதேபோல் இன்று பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில், தென்மராட்சிப் பகுதியில் உள்ள உதவி அரச அதிபர்களையும் பிற்பகல் 4 மணிக்கு கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வடமராட்சியில் உள்ள சகல அரச அதிபர்களையும் யாழ். உதவி அரச அதிபர் சந்திக்கவுள்ளார். (வி)

91-ம் நாள் நினைவு அஞ்சலி

வீரவேங்கை மது

ஐ. மணிவாச்கன் வரதராஜன்

(வட்டு கிழக்கு)

தாயின் மடியில்: 05-05-1973

தாயக மண்ணில்: 15-08-1991

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறோம்

குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

வட்டுக் கிழக்கு வட்டுக்கோட்டை. (சி 5561)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 62-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/10336/31.